OS 195/2021

வா.சா.1 ராஜசேகரன் த/பெ சந்திரநாதன்

நாள் 06.02.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. நான் என்ன வேலை செய்கிறேன் என்ன வருமானம் என்றால் தற்சமயம் சும்மா தான் இருக்கிறேன். பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்றால் சத்துணவில் வேலை செய்து ஓய்வு பெற்று விட்டார் அவருக்கு நிலம் எல்லாம் இருக்கிறது. பணம் கொடுத்த போது தான் தாவா பாண்டு எழுதி கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். தாவா பாண்டை பிரதிவாதி அவர் கைப்பட எழுதி கொடுத்தார். பாண்டு எழுதி கொடுக்கும் போது நானும் பிரதிவாதி மட்டும் தான் இருந்தோம். வழக்குரையிலும் முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் மற்றும் ஏற்கனவே குறுக்கு விசாரணையின் சாட்சியத்தின் போது போடப்பட்ட கையொப்பம் ஒரே மாதிரி தான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்குரையில் பிரதிவாதிக்கு மாதம் ரூ.10லட்சம் வருமானம் வருவதாக விவரம் சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். வழக்கு எப்போது தாக்கல் செய்தேன் என்றால் 29.04.2021ல் வழக்கு தாக்கல் செய்தேன். பாண்டில் யார் யார் சாட்சி கையொப்பம் போட்டிருக்கிறார்கள் என்றால் ராதாகிருஷ்ணன், கன்னியப்பன், தருமநாதன், பழனி ஆகியோர் கையொப்பம் போட்டிருந்தார்கள்.

2. மேற்படி 4 சாட்சிகளும் ஒரே நாளில் கையொப்பம் போட்டார்களா என்றால் ஆமாம். கையொப்பம் போட்ட பிறகு தாவா பாண்டை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். யார் முதலில் சாட்சி கையொப்பம் செய்தது என்று வரிசையாக சொல்ல முடியுமா என்றால் முதலில் ராதாகிருஷ்ணன், அதன் பிறகு கன்னியப்பன், அதன் பிறகு தருமநாதன், அதன் பிறகு பழனி கையொப்பம் போட்டார்கள். சாட்சிகளின் விலாசம் எழுதப்பட்டதா என்றால் இல்லை. பாண்டை பிரதிவாதி தான் எழுதி கையொப்பம் செய்து கொடுத்தார். மேற்படி 4 சாட்சிகள் எந்த தேதியில் கையொப்பம் செய்தார்கள் என்றால் 29.05.2018ல் கையொப்பம் போட்டார்கள். சாட்சி மீண்டும் 18.07.2015ல் பாண்டு எழுதி கொடுத்ததாகவும் அப்போது கையொப்பம் போட்டு கொடுத்ததாகவும் சாட்சியம் அளிக்கிறார். 29.05.2018ல் யாரும் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் ஆமாம் போடவில்லை பாண்டு எந்த தேதியில் எழுதப்பட்டதோ அந்த தேதியில் போட்டார்கள். வழக்குரையில் எந்த இடத்தில் பாண்டு எழுதப்பட்டது எத்தனை மணி அளவில் பாண்டில் கையொப்பம் போடப்பட்டது என்று விவரம் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை பிரதிவாதி தான் பாண்டை எழுதி எடுத்துவந்தார்.

3. நான் இதற்கு முன்னர் எங்கு வேலை பார்த்தேன் என்றால் கடன் கொடுக்கும் போது மில்லில் வேலை பார்த்தேன். மில்லில் வேலை செய்யும் போது எனக்கு எவ்வளவு வருமானம் என்றால் மாதம் ரூ.3ஆயிரம் வருமானம் வரும். 3 ஆயிரத்தில் தான் குடும்ப செலவு செய்வேன் என்றால் எனக்கு நிலம் உண்டு 3 போகம் பயிர் செய்வேன் அதில் வருமானம் வரும். எந்த வருமானத்தின் அடிப்படையில் கடன் கொடுத்தேன் என்று எனது வழக்குரையில் விவரம் சொல்லவில்லை என்றால் ஆமாம் சொல்லவில்லை. 18.07.2015க்கு பிறகு பாண்டில் எந்த ஒரு கையொப்பமும் போடப்படவில்லை என்றால் எந்த கையொப்பமும் போடப்படவில்லை. தாவா கடனை கொடுப்பதற்கு எனக்கு போதுமான வசதி வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்னர் பிரதிவாதிக்கு கொடுக்கல் வாங்கல் கொடுத்திருக்கிறேனா என்றால் இல்லை.

4. பிரதிவாதி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் தாவா பாண்டை பிரதிவாதி எழுதி கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்காத கடனுக்கு நான் பொய் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.